# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வியாழக்கிழமை நாள் 29.09.2022 காலை 10.15 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி காமராஜ் மன்றம் ஏ.எஸ்.ஜி. லூர்துசாமி கூட்ட மண்டபத்தில் பின்வரும் பொருள்களைப் பற்றி அவசரக் கூட்டம் நடைபெறும்.**

## நிகழ்ச்சி நிரல்

**பொருள்: 1**

திருச்சிராப்பள்ளி நகரம் மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டின் நான்காவது பெரிய நகரமாகவும் தவிர தமிழ்நாட்டின் மையப்பகுதியில் அமையப் பெற்றுள்ளதாகவும் உள்ளது . 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி , திருச்சிராப்பள்ளி மாநகராட்சியின் மொத்த மக்கள் தொகை 9,16,674ஆகும்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் ஸ்ரீரங்கத்தில் அருள்மிகு அரங்கநாதர் திருக்கோவில் உள்ளது. இத்திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மொத்த 65 வார்டுகளில் 1 முதல் 7 வரையிலான வார்டுகளில் ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்கோவில் பகுதிகள் அடங்கி உள்ளது . இதன் தற்போதைய மக்கள் தொகை 1,02,331 ஆகும். இவ்விருதலங்களுக்கும் நாளொன்றிற்கு கனரக வாகனங்கள் வாயிலாகவும் , இலகு ரகவாகனங்கள் வாயிலாகவும் வந்து செல்லும் யாத்ரீகர்கள் எண்ணிக்கை 40,000 ஆகும்.

மேலும், இவ்விருதலங்களுக்கும் போக்குவரத்து புள்ளி விவரங்களின் படி நாளொன்றிற்கு 81 எண்ணிக்கையிலான அரசு மற்றும் தனியார் பேருந்துகள் இயக்கப்பட்டும் , 676 முறை வந்து செல்லும் வகையிலும் இருந்து வருகிறது. மேலும், சராசரியாக நாளொன்றிற்கு 90 வேன்களும் மற்றும் 200 கார்களும் வந்து செல்கின்றன . ஆனால், உள்ளூர் பேருந்துகளையோ, வெளியூர் மற்றும் சுற்றுலா பேருந்துகளையோ நிறுத்தம் செய்ய பிரத்யேகமாக பேருந்து நிறுத்தங்கள் ஏதும் தற்போது இல்லை . மேலும், இந்நகரமானது சரித்திரப் புகழ் மற்றும் புராதன நகரம் என்பதாலும் இங்கு வருகை தரும் யாத்ரீகர்கள் நாளுக்கு நாள் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருவதாலும் , இந்நகரத்தின் வளர்ச்சி , அதிகரித்துவரும் மக்கள் தொகை போக்குவரத்து நெரிசல் உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையில் போக்குவரத்து வாகனங்கள் அனைத்தும் சாலையோரங்களிலேயே நிறுத்தப்பட்டுவருவதாலும் , இந்நகரத்திற்குப் பேருந்து நிறுத்தம் அமைப்பது என்பது அவசியமானதும் , இன்றியமையாததும் ஆகும் , ஆகவே புதிய பேருந்துநிலையம் அமைப்பது தொடர்பாக நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் அவர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் கீழ்க்காணும் இடத்தில் புதிய பேருந்து முனையம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | புல எண் | பரப்பளவுசதுரமீட்டர் | பட்டாதாரர்பெயர் |
|---|---|---|---|
| 1 | 717 பாகம் | 4318,20 | நகராட்சி |

மேற்கூறிய இடமானது மாநகராட்சி வசம் வைக்கப்பட்டுள்ள அரசுபுறம்போக்கு நிலமாகும் . மேலும் முழுமை த்திட்டத்தில் மேற்படி இடமானது கலப்புக்குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ளது . மேலும் தற்போது இவ்விடத்தில் செயல்பட்டு வந்த கிளப், குத்தகை செலுத்தாத காரணத்தினால் மாநகராட்சி வசம் மீட்டெடுக்கப்பட்டுள்ளது. அதன் அருகில் தற்போது உள்ள சீனிவாசலு நினைவு பூங்கா அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவிலோ அல்லது விரிவு அபிவிருத்தி திட்டத்தினிலோ பூங்கா என வரையறுக்கப்படவில்லை . எனவே இவ்விரு இடங்களையும் இணைத்து 4318.20 சதுரமீட்டர் பரப்பளவில் ஸ்ரீரங்கத்திற்கென பிரத்யேகமாக பேருந்து முனையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது . இதன் உத்தேச செலவினம் ரூ . 9.00கோடி ஆகிறது . எனவே மேற்கூறிய இடத்தில் பேருந்து முனையம் அமைக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1 . மாமன்றம்பரிசீலித்து ஒப்புதலளிக்கலாம்.
2. ஒப்புதல் அளிக்கும் பட்சத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வழியாக அரசிற்கு கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
3. அரசுச்செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,சென்னை அவர்களுக்கு உரிய வழியாக நிர்வாக அனுமதி வழங்கக்கோரி கருத்துரு அனுப்பி வைக்கலாம்.
4. இத்திட்டம் மேற்கொள்வதற்கு தேவையான வரைபடங்கள், வடிவமைப்புகள் மதிப்பீடுகள், சாத்தியக்கூறு அறிக்கை (Feasibility Report) விரிவான திட்டஅறிக்கை (Details Plan Report) நிதி இயக்க திட்டம் (Financial Operation plan) ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாடுகள் போன்ற திட்டம் செயலாக்கம் செய்வதற்கு தேவையான அனைத்து விவரங்களையும் தனியார் நிறுவனங்கள் மூலம் தயார் செய்ய ஆகும் செலவினத்தை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளஅனுமதி வழங்கலாம்.
5. பேருந்து முனையம் வடிவமைப்பு ஒப்புதல் பெற நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு உரிய வழியாக அனுப்பி வைக்கலாம்.
6. இப்பேருந்து முனையம் அமைப்பதற்கு ஆகும் ரூ.9.00கோடி உத்தேசசெலவினம் அரசு மான்யமாகவோ அல்லது கடனாகவோ பெற்று அமைக்க ஒப்புதல் செய்யலாம்.

(இ1/4193/2022(ஸ்ரீ))

**தீர்மானம் எண்: 183, பொருள்: 1 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 2

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, நான்காவது மண்டலம், பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி (Integrated Bus Terminal) & பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் (Multi Utility Facilities Centre) மற்றும் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி (Truck Terminal) & சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். (Roads, SWD and other Infrastructure facilities) அமைக்கும் பணிகள் நடைபெறவுள்ள திட்டப்பகுதியில் இடையூறாக அமைந்துள்ள மின்சார உயர் மின்அழுத்த மின்கம்பங்களை (Electrictiy Pylons) இடமாற்றம் செய்து தருமாறும், அதற்கான கட்டணத் தொகையினை தெரிவிக்குமாறு 05.05.2022ம் தேதிய இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக, கண்காணிப்பு பொறியாளர், தமிழ்நாடு மின்சாரவாரியம், திருச்சிராப்பள்ளி அலுவலகத்தில் கோரப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து வரப்பெற்ற தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலக 15.09.2022ம் தேதிய கேட்பு (L.R.No.AE/JE/O&M/MKM/ F.App.Tracking/D.No.231/2022) கடிதத்தில், ரூ.36,44,182/-ஐ 29.09.2022ம் தேதிக்குள் செலுத்துமாறு கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்கண்ட தொகையினை தமிழ்நாடு அரசு மின்வாரியத்துறை அலுவலகத்திற்கு செலுத்துவதற்கு மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட கட்டணத் தொகையினை திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 2022-2023 திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கையில் கணக்கு தலைப்பு எண் .4107002ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ.100.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
3. மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகையினை மின்வாரியத்திற்கு செலுத்திய அனுமதி வழங்கலாம்.

இ1/4343/2021(**மை**)

**தீர்மானம் எண்: 184, பொருள்: 2 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள்:3

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கொள்ளிடம் ஆற்றங்கரையில், ஆண்டவர் ஆசிரமம் அருகில் அமைக்கப்பட்டுள்ள பொது தரைமட்ட கிணறு மூலம் நாளொன்றுக்கு சராசரியாக சுமார் 40.00 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் உந்தப்பட்டு 55 மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகளுக்கு அனுப்பப்பட்டு அப்பகுதிவாழ் பொது மக்களுக்கு குடிநீர் வழங்கும் பணி தங்கு தடையின்றி நடைபெற்று வருகிறது.

மேற்கூறிய நீர்ப்பணி நிலையம் அமைந்துள்ள இடம் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியாக உள்ளதால், நீர்ப்பணி நிலைய வளாகத்துக்குள் சமூக விரோத செயல்களில் சில நபர்கள் ஈடுபடுவதாலும், அவ்வப்போது கால்நடைகள் ஊடுருவி வருகிறது.

எனவே நீர்பணி நிலைய வளாகத்தை பாதுகாத்திட அதனை சுற்றிலும் மதில் சுவர் அமைத்து பாதுகாத்திட வேண்டியுள்ளதால், இப்பணியினை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தரப்படுத்தப்பட்ட விலை விபர பட்டியலின் விலையை கொண்டு மதிப்பீடு ரூ.43.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதி கோரி மாமன்ற பொருள் தயார் செய்து ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக்குறிப்பு:**

1. இப்பணிக்கான மதிப்பீடு தொகை ரூ.43.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2022–2023ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **தலைமை நீர்ப்பணி நிலைய கட்டிடங்கள் பராமரிப்பு / அபிவிருத்தி (4102001)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ .150.00 இலட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/ 9582/ 2022(மையம்)**

**தீர்மானம் எண்: 185, பொருள்: 3 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் : 4**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலத் துறையின் மான்ய கோரிக்கையின் போது, அரசு பள்ளி மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் சிறப்பு திட்டத்தினை அறிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அரசுப்பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்கு ஒருங்கிணைந்த சமையற் கூடம் ( Centralized Community Kitchen) அமைப்பதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்.சி.ஏ –2 நாள். 14.07.2022ல் தெரிவித்துள்ளதன் பேரில், மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, 26.07.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் அரசாணை (நிலை) எண். 43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந 4–1) துறை நாள். 27.07.2022ல் ஒருங்கிணைந்த சமையற் கூடம் கட்டும் பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் அடங்கும் 40 மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி உணவு வழங்கும் திட்ட பணிகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்கள் இணையதளம் வழியாக விருப்பணர்வு ஒப்பந்தப்புள்ளி கோர தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில், மேற்படி பணிக்கு 16.08.2022 அன்று விருப்பணர்வு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட்ட விவரம் | தொழில் நுட்ப தகுதி |
|---|---|---|---|
| 1 | M/s. No Food Waste, கோயம்புத்தூர் | On Line/ Off Line | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது |
| 2 | M/s. அருணா கேட்டரிங்,திருச்சி | Off Line | தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது |
| 3 | M/s. ஸ்ரீ அபிநயா எண்டர்பிரைசஸ், திருச்சி | On Line | தொழில் நுட்ப தகுதி பெறவில்லை |

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு வரிசை எண். 1 மற்றும் வரிசை எண்.2ல் நிறுவனங்கள் மட்டும் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளன. வரிசை எண்.3ல் கண்டுள்ள நிறுவனங்கள் தொழில்நுட்ப அனுமதி பெறவில்லை.

மேற்படி தொழில்நுட்ப தகுதிப்பெற்றுள்ள இரண்டு நிறுவனங்களது விலைப்புள்ளி உறையை 19.08.2022 அன்று திறக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர்கள் பெயர் மற்றும் விலாசம் | விலை/ ஒரு நாளொன்றுக்கு/ ஒரு மாணவருக்கு | தொகை / ஒரு நாளொன்றுக்கு/ ஒரு மாணவருக்கு (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | M/s. No Food Waste, கோயம்புத்தூர் | 12.65 | 12.65 |
| 2 | M/s. அருணா கேட்டரிங், திருச்சி | 12.75 | 12.75 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய M/s. No Food Waste, கோயம்புத்தூர் நிறுவனம் வழங்கிய தொகை ரூ.12.65/- குறைத்து வழங்குமாறு 23.08.2022ம் நாளைய கடிதத்தில் கோரியதில், மேற்படி நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விலையினை குறைத்து தர இயலாது என 24.08.2022ம் நாளைய கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

எனவே, மிக குறைவான விலைப்புள்ளி வழங்கிய M/s. No Food Waste, கோயம்புத்தூர் நிறுவனத்தின் தோராய செலவினம் ஒரு மாதத்திற்கு ரூ.61,74,150 –ஐ (ரூ. 12.65/- x 2789 x 25 நாட்கள் x 7 மாதங்கள்) ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூந்தாய்வு குழு பரிசீலித்து வழங்கிய பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு : -**

1. மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. M/s. No Food Waste , கோயம்புத்தூர் நிறுவனத்தின் தோராய செலவினம் ஒரு மாதத்திற்கு ரூ.61,74,150 /-ஐ (ரூ. 12.65/- x 2789 x 25 நாட்கள் x 7 மாதங்கள்) செலவினத்தை ஏற்க மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.
3. இத்திட்ட பணிக்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும் , அரசிடமிருந்து மான்ய நிதி வரப்பெற்றவுடன் பின்னர் ஈடு செய்து கொள்ளவும் அனுமதி அளிக்கலாம்.
4. அவசர அவசியம் கருதி , மாமன்ற ஒப்புதலை எதிர்நோக்கி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்க அனுமதி அளிக்கலாம்.

<u>**இ7/9731/ 2022 (மையம்)**</u>

**தீர்மானம் எண்: 186, பொருள்: 4 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 5

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டின்படி, 915569 மக்கள் வசித்து வருகின்றனர். 2020ம் ஆண்டு கணக்கீட்டின் படி 1045436 மக்கள் உள்ளனர் என கணக்கிடப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 135லிட்டர் வீதம் தினசரி சுமார் 138.50 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்படுகிறது. ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு 110.80 லிட்டர் கழிவுநீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சிக்கு சொந்தமான 574.38 ஏக்கர் பஞ்சப்பூர் பகுதியில், 274.50 ஏக்கர் பரப்பளவில் - 88.64 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் - Waste Stabilization Pond என்ற பழமையான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது 30 MLD பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. 58 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மட்டும் பயன்பாட்டில் உள்ளது. தற்போது அம்ரூத் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ், நவீன தொழில் நுட்பத்தில் (SBR Technology ) 37 MLD கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கீழகல்கண்டார் கோட்டை பகுதியில் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், எதிர்வரும் 2031ம் ஆண்டு மக்கள் தொகை 13,00,000 ஆக இருக்கும் என்ற கணிப்பில் நாள் ஒன்றுக்கு வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு 175.50 MLD ஆகவும், பெறப்படவுள்ள கழிவுநீரின் அளவு 140 MLD எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே, இம்மாநகராட்சியில் எதிர்கால மக்கள்தொகையை கருத்தில் கொண்டு பஞ்சப்பூரில் நவீன முறையில் புதிதாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கு இவ்வலுவலக கடிதம் எண். இ7/4717/2018 (மையம்) நாள். 19.11.2021 ம் நாளைய கடிதத்தில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்வதற்கு கலந்தறிதற்குரியரை நியமனம் செய்ய கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் எண். 15959/2021/ AMRUT–1 Dated 23.08.2022 ம் நாளைய கடிதத்தில், அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ், பஞ்சப்பூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணிக்கு அரசின் அனுமதி வழங்கும் குழு நடவடிக்கை எண்.10022/எம்.சி–2/2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி–2) துறை நாள்.13.08.2022ல் மேற்படி திட்ட பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்தல், வடிவமைப்பு, ஒப்பந்தப்புள்ளி படிவங்கள், ஒப்பந்தப்புள்ளி கட்டுப்பாடுகள் மற்றும் திட்டம் செயலாக்கம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள TamilNadu Water Investment Company Ltd, Chennai நிறுவனத்திற்கு நியமனம் செய்து உத்திரவிட்டது.

இதனைத் தொடர்ந்து, திட்ட பணியின் அவரச அவசியம் கருதி, TamilNadu Water Investment Company Ltd, Chennai நிறுவனம் மூலம் பஞ்சப்பூரில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தயார் செய்யும் பணிக்கு தொகை ரூ.77,22,000.00 + GST 18% ரூ.1389960/– ஆக மொத்தம் ரூ.91,11,960/– பணியினை மேற்கொள்ள மாமன்றப் பொருள் தயார் செய்து அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. பணிக்கு மதிப்பீடுத் தொகை ரூ .77,22,000.00 + GST 18% ரூ.1389960/– ஆக மொத்தம் ரூ.91,11,960/– க்கு ஒப்புதல் அளிக்கலாம்.
2. அரசின் அனுமதி வழங்கும் குழு நடவடிக்கை எண் .10023/எம்.சி–2/2022 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.சி–2) துறை நாள் .13.08.2022ல் தெரிவித்துள்ள நிபந்தனைகளின் படி பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்
3. TamilNadu Water Investment Company Ltd , Chennai நிறுவனம் இப்பணியின் மூலம் விரிவான திட்ட அறிக்கை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் தயார் செய்ய ஆகும் செலவினத் தொகை ரூ .9111960/– என்ற ஒப்பந்தத்தில் பேரில் பணி மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
4. இப்பணி தொடர்பான ஒப்பந்தம் / ஆவணங்களில் கையொப்பமிட ஆணையர் அவர்களுக்கு முழு அதிகாரம் அளிக்கலாம்.
5. இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதி செலவினங்கள் 2205202 பொறியியல் கலந்ததறிதற்குரியர் கட்டணம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 300.00 இலட்சத்திலிருந்து ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்

**இ7/1933/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 187, பொருள்: 5 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தகுதியான சாலையோர வியாபாரிகளின் சமூக பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரத்தை உறுதி செய்திடவும் , அவர்கள் எவ்வித சிரமமு ம் இன்றி வியாபாரம் செய்வதற்கு ஏற்ற சூழல் உருவாக்கவும் , நடப்பு ஆண்டில் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்கும் பணியினை ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ந .க.எண்: 20789/2021/UPA1 நாள்: 16.06.2022 கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண் : 04/2022–2023 வாயிலாக 18.07.2022 அன்று முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் பெறப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து மறு ஒப்பந்தப்புள்ளி எ ண்: 06/2022–2023 நாள்: 17.08.2022 கோரப்பட்டதில் கலந்து கொண்ட மூன்று நிறுவனங்களின் தொழில்நுட்ப உறை பிரித்து சரிபார்க்கப்பட்டதில் M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனம் மட்டுமே தொழில் நுட்ப தகுதி பெற்றிருந்தது . எனவே தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ள M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனத்தின் விலைப்புள்ளி உறையைப் பிரிக்க ஆணையர் அவர்கள் அனுமதி அளித்ததைத் தொடர்ந்து விலைப்புள்ளி உறை பிரிக்கப்பட்டதில் M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனம் இப்பணியினை ரூ .74,70,000/– தொகையில் மேற்கொள்ள விலைப்புள்ளி அளித்திருந்தது.

இந்நிலையில் ஒப்பந்தப்புள்ளியில் அளித்துள்ள விலையில் விலை குறைப்பு செய்து தருமாறு M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனத்திற்கு கடிதம் அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனம் ஒப்பந்தப்புள்ளி விலைப்புள்ளியி ன் விலையை விட 0.67 சதவீதம் விலை குறைவாக இப்பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் அளித்துள்ளது . எனவே M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனம் ரூ .74,20,000/- தொகையில் இப்பணியினை மேற்கொள்ள அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் , இந்நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. சாலையோர வியாபாரிகளின் கணக்கெடுப்பு பணியினை ரூ .74,20,000/- தொகையில் மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தை இம்மாநகராட்சியின் 2022-2023 திருத்திய வரவு செலவு திட்டம் தலைப்பு எண் . 2205203ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. M/s.Sense Image Technology Pvt Ltd , சென்னை நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், இந்நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**[எச்3/8601/2022 (மையம்)]**

**தீர்மானம் எண்: 188, பொருள்: 6 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பஞ்சப்பூர் முதல் கரூர் புறவழிச்சாலை வரையிலான கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரையில் தார்சாலை அமைக்கும் பணிக்கு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியினை மேற்கொள்ள, கலந்தாலோசகர் நியமனம் செய்வதற்கு, RFP எண்.242/2022-2023ன் வாயிலாக 06.09.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப் புள்ளிகள் கோரியதில், வரப்பெற்றுள்ள ஒப்பந்தப் புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பஞ்சப்பூர் முதல் கரூர் புறவழிச்சாலை வரையிலான கோரையாறு மற்றும் உய்யகொண்டான் ஆறு கிழக்கு கரையில் தார்சாலை அமைக்கும் திட்டப்பணிக்கு, விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணியினை மேற்கொள்ள கலந்தாலோசகர் நியமனம் செய்யும் பணி. | 1. M/s. InfraEn India Pvt Ltd., Bangalore JV with M/s. Zonta Infratech Pvt Ltd., Bangalore and M/s.Asia Infrastructure Advisory Service Pvt Ltd., Bangalore. **ரூ.2,35,00,000/-**<br>2. M/s. Prakar Software Technologies Pvt Ltd., Kerala. **தொழில்நுட்ப தகுதி பெறவில்லை.** | முதல்முறையாக 06.09.2022ம் தேதியன்று கேட்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் இரண்டு நிறுவனங்கள் கலந்து கொண்டதில், M/s. InfraEn India Pvt Ltd., Bangalore JV with M/s. Zonta Infratech Pvt Ltd., Bangalore and M/s.Asia Infrastructure Advisory Service Pvt Ltd., Bangalore நிறுவனம், ரூ.2,35,00,000/-க்கு ஒப்பந்தப் புள்ளி வழங்கியுள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று அனுமதி அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளியினை பத்தி எண் .4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.
2. 2022-2023ம் ஆண்டின் வரவு செலவு திட்ட அறிக்கையில், பொறியியல் கலந்தறிதற்குரியர் கட்டணம் என்ற தலைப்பின் (2205202) கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி ரூ .300.00 இலட்சத்திலிருந்து இப்பணிக்கான நிதியினை ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி வழங்கலாம்.

**கோப்பு எண்.இ1/7964/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 189, பொருள்: 7 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்:8

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நான்காவது மண்டலம், பஞ்சப்பூரில் கீழ்கண்டுள்ள பணிகளை பொதுநிதி மற்றும் மான்யத்தின் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.162/2022–2023ன் வாயிலாக 11.08.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப் பெற்றுள்ள ஒகளின் பரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பஞ்சப்பூரில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் கட்டும் பணி (Integrated Bus Terminal) மற்றும் பல்வகை பயன்பாடுகள் மற்றும் வசதிகளுக்கான மையம் (Multi Utility Facilities Centre). மதிப்பீடு ரூ.243.78 கோடி. | 1. M/s. CMK Projects (P) Ltd., Joint Venture with M/s. Trineva Infra Projects Pvt. Ltd., Erode.<br>24.76% அதிகம்.<br>(நடப்பு 2022–2023ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 17.35% அதிகம்)<br>2வது பேச்சுவார்த்தைக்கு பின்னர் 4.99% அதிகம்.<br>2. M/s. RPP Infra Projects Pvt. Ltd., Erode.<br>32.81% அதிகம்.<br>(நடப்பு 2022–2023ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 24.92% அதிகம்) | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. CMK Projects (P) Ltd., Joint Venture with M/s. Trineva Infra Projects Pvt. Ltd., Erode ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 24.76 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், நடப்பு 2022–2023ம் ஆண்டின் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை வரப்பெற்றதை தொடர்ந்து, இதனுடன் ஒப்பிட்டு கணக்கிடும் போது, மதிப்பீட்டை காட்டிலும் 17.35 சதவீதம் கூடுதலாக வருவதை, குறைத்து தருமாறு மேற்படி நிறுவனத்திடம் கோரப்பட்டதில், மேற்படி நிறுவனத்தின் 13.09.2022ம் தேதிய 2வது விலை குறைப்பு கடிதத்தில், மதிப்பீட்டை காட்டிலும் (SOR 22–23) 4.99 சதவீதம் கூடுதலாக இப்பணியினை செய்து தருவதாக தெரிவித்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று அனுமதி அளிக்கலாம். |
| 2. | பஞ்சப்பூரில் கனரக சரக்கு வாகன முனையம் கட்டும் பணி (Truck Terminal) மற்றும் சாலைகள், மழைநீர் வடிகால் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள். (Roads, SWD and other Infrastructure facilities). மதிப்பீடு ரூ.106.20 கோடி. | 1. M/s. SR United Infra Developers, Pudukottai Joint Venture with M/s. RR Thulasi Builders (India) Pvt Ltd. Erode.<br>25.24% அதிகம்.<br>(நடப்பு 2022–2023ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 18.11% அதிகம்)<br>2வது பேச்சுவார்த்தைக்கு பின்னர் 4.99% அதிகம்.<br>2. M/s. Kumar Builders, Ranipet.<br>30.02% அதிகம்.<br>(நடப்பு 2022–2023ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விகிதத்துடன் ஒப்பிடுகையில் 22.62% அதிகம்) | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. SR United Infra Developers, Pudukottai Joint Venture with M/s. RR Thulasi Builders (India) Pvt Ltd. Erode ஒப்பந்தக்காரர் மதிப்பீட்டைக் காட்டிலும் 25.24 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்திருப்பினும், நடப்பு 2022–2023ம் ஆண்டின் பொதுப் பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் தரப்படுத்தப்பட்ட விலை விபர அட்டவணை வரப்பெற்றதை தொடர்ந்து, இதனுடன் ஒப்பிட்டு கணக்கிடும் போது, மதிப்பீட்டை காட்டிலும் 18.11 சதவீதம் கூடுதலாக வருவதை, குறைத்து தருமாறு மேற்படி நிறுவனத்திடம் கோரப்பட்டதில், மேற்படி நிறுவனத்தின் 13.09.2022ம் தேதிய 2வது விலை குறைப்பு கடிதத்தில், மதிப்பீட்டை (SOR 22–23) காட்டிலும் 4.99 சதவீதம் கூடுதலாக இப்பணியினை செய்து தருவதாக தெரிவித்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று அனுமதி அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

1. அரசாணை எண்.34 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.22.03.2006ல் தெரிவித்துள்ளவாறு, மதிப்பீட்டைக் காட்டிலும் 5 சதவீதத்திற்குள் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றால், அது முதன் முறையாக வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருந்தாலும், அவசர அவசியப் பணியாக இருப்பின் மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண்.672/2006/WB3, நாள்.03.04.2006ன் வாயிலாக தெரிவித்துள்ளதை ஏற்று, மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2ல் கண்டுள்ள பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.
2. மேற்கண்ட அட்டவணையில் வரிசை எண்.1 மற்றும் வரிசை எண்.2ல் காணும் பணிகளை மதிப்பீட்டை (SOR 22-23) காட்டிலும் 4.99 சதவீதம் கூடுதலாக மேற்கொள்வதற்கு ஏற்படும் செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**கோப்பு எண்.இ1/4343/2021(மையம்)**

**தீர்மானம் எண்: 190, பொருள்: 8 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

## பொருள்: 9

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில், கீழ்கண்டுள்ள பணியினை பொதுநிதி 2022-2023ன் கீழ் மேற்கொள்ள, ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.271/2022-2023ன் வாயிலாக 09.09.2022 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் (திருவாளர்கள்) | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மண்டலம் 4, பஞ்சப்பூர் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 2.4 Mwp தரைமட்ட சூரிய ஒளி மின் நிலைய உபகரணங்களை கழற்றி புதியதாக அமைய உள்ள இரண்டாம் தொகுப்பு 7.4 Mwp சூரிய ஒளி மின்நிலையம் அருகில் பொருத்தி இயக்கி தரும் பணி.<br>மதிப்பீடு ரூ.320.00 இலட்சம். | 1. M/s. கிரீன்பீல்டு சோலார் சொலியூசன்ஸ், பி.லிட்., மற்றும் (Consortium) M/s. சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை. 0.05% குறைவு.<br><br>2. M/s. சன்டாஸ்டிக் இன்ஜினியரிங் பி.லிட்., சென்னை மற்றும் (Consortium) M/s. ரிலையண்ட் குளோபல் கிரீன் எனர்ஜி அண்ட் கோ., கோயம்புத்தூர், 20.06% கூடுதல். | வரப்பெற்ற இரு ஒப்பந்தப் புள்ளிகளில் M/s. கிரீன்பீல்டு சோலார் சொலியூசன்ஸ் , பி.லிட்., மற்றும் M/s. சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை, ஒப்பந்தக்காரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகளை பத்தி எண்.4ல் கண்டுள்ள காரணங்களை முன்னிட்டு ஏற்கலாம்.

**கோப்பு எண்.இ1/7421/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 191, பொருள்: 9 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

பொருள்:10

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 4, வார்டுஎண்.63க்குட்பட்ட கலிங்க நகர் பகுதியில் அமைந்துள்ள வாய்க்காலினை தூர்வாரும் பணியினை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.3.50 இலட்சத்திற்கு தயார் செய்து கோப்பு எண்.இ3/8055/2022 (மையம்) நாள்.13.06.2022ல் ஆணையர் அவர்கள் நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.128/2022–23 வரிசை எண்.31ன் வாயிலாக, நாள்.30.06.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ். ஏ.பி.டி.கன்ஸ்ரக்சன்ஸ்**, நிறுவனம் மதிப்பீட்டைக் காட்டிலும் 0.06 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 15.07.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. பணி தொடங்குவதற்கு முன்னர் பெய்த பெரும் மழையினால் வாய்க்கால்களில் நிறைந்துள்ள மணல் மற்றும் கழிவுகளால் மழைநீர் வாய்க்காலின் வழியாக செல்லாமல் வழியின்றி அப்பகுதிகளிலுள்ள குடியிருப்புகளில் புகுந்தும், வாகனங்கள் செல்ல வழியின்றியும் உள்ளதால், மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மாநகராட்சி இயந்திரங்கள் மூலம் மேற்கண்ட வாய்க்காலில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணியினை ஒப்பந்ததாரர் மூலம் மேற்கொள்ள இயலாது என்பதால் இப்பணியினை ரத்து செய்யவும், ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள முன்வைப்புத்தொகை ரூ.3,500/–க்கான NSC கணக்கு எண்.020043233362 **மெசர்ஸ். ஏ.பி.டி.கன்ஸ்ரக்சன்ஸ்** , திருச்சி நிறுவனத்தாருக்கு திரும்ப வழங்க வேண்டி மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட பணியினை ரத்து செய்யலாம்.
2. முன்வைப்புத் தொகையினை திரும்ப வழங்க அனுமதிக்கலாம்.

**இ3/ 9210 /2022 (மையம்)**

**தீர்மானம் எண்: 192, பொருள்: 10 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்: 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டுக்குழு அலுவலகம் எண்.V, வார்டு எண்.23க்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.245/2022–23ன் வாயிலாக 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரபெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்க்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மற்றும் ஒப்பந்த சதவீதம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வார்டு எண்.23க்குட்பட்ட (பழைய வார்டு எண்.55) பகுதியில் உள்ள காந்திபுரம் நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் கூடுதல் அறைகள் கட்டும் பணி.<br><br>**மதிப்பீடு ரூ.90.00 இலட்சம்** | 1. **திரு.ஆர் ஏ. குழந்தைவேல், திருச்சி.**<br>**0.01 % குறைவு**<br><br>2. மெசர்ஸ். அம்மன் பில்டர்ஸ், திருச்சி.<br>**2.20% கூடுதல்** | வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.ஆர் ஏ. குழந்தைவேல், திருச்சி,** ஒப்பந்ததாரர் அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **0.01%** சதவீதம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக்குறிப்பு.**

மேற்கண்ட அட்டவணையில் உள்ள பணிக்கு பத்தி எண்.4ல் தெரிவிக்கப்பட்டுள்ள விவரப்படியான மதிப்பீட்டைக் காட்டிலும் குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். **(இ2/ 9867/2022 (மை))**

**தீர்மானம் எண்: 193, பொருள்: 11 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 15வது நிதிக்குழு 2021-22 ஆண்டு நிதி காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பின் கீழ் மினி ஜெட்ராடர் இலகுரக வாகனம் 3000 Litre Tank Capacity (4 Wheeler) - 5 எண்கள் மதிப்பீட்டுத் தொகை ரூ.175.00 லட்சத்தில் வழங்கும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண். **21191/2021**/CFC, நாள்:16.06.2022 ல் நிர்வாக அனுமதி அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:185/2022-23, வரிசை எண்.2, நாள்:18.08.2022ன் வாயிலாக முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட மூன்று நிறுவனங்களில் இரு நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை. தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. NO | Description | Qty in Nos | Estimate Amount | | M/s. Lakshmi Auto Diesel Works, Mettur | | After Negotiation Dt.02.09.2022 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate (Rs) | Rate (Rs) | Amount (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) |
| 1 | மினி ஜெட்ராடர் இலகுரக வாகனம் 3000 Litre Tank Capacity ( 4 Wheeler) - 5 எண்கள் வழங்கும் பணி | **5** | 3492641 | 17463205 | 3498965 | 17494825 | 3488000 | 17440000 |
| | **Total** | | | | | 17494825 (+0.18 More) | | 17440000 (-0.13% Less) |
| | | | EMD Rs.175000/- | | HDFC Bank, D.D.No.003838 Dt:17.08.2022., Rs.175000EMD Rs.175000/- | | | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.**1,74,63,205**/-ஐ காட்டிலும் (-)0.13% குறைவாக ரூ.**1,74,40,000**/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Lakshmi Auto Diesel Works, Mettur** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளது. இப்பணியானது 15வது நிதிக்குழு, 2021-22 ஆண்டு நிதி காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பின் கீழ் மேற்கொள்ளும் பணியாதலால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்க மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் (-) 0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. Lakshmi Auto Diesel Works, Mettur நிறுவனத்தா**ரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.**1,74,40,000** /-ல் மேற்கண்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 15வது நிதிக்குழு 2021-22 ஆண்டு காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2200.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/ 10209 /2022(மையம்)**

**தீர்மானம் எண்: 194, பொருள்: 12 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:13**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 15வது நிதிக்குழு காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் 2021-22 ஆண்டு நிதியின் கீழ் சாலையோர திறந்த வெளி மழைநீர் வடிகால் தூர்வாரும் டீ-சில்ட் கனரக வாகனம் – 3 எண்கள் (NALLA Cleaning vehicle) மதிப்பீட்டுத் தொகை ரூ.120.00 லட்சத்தில் வாங்கி கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ந.க.எண்.21191/2022/CFC, நாள்:16.06.2022 ல் நிர்வாக அனுமதி அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:185/2022-23, வரிசை எண்,3 நாள்:18.08.2022ன் வாயிலாக முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இவ்ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட இரு நிறுவனங்களில் ஒரு நிறுவனம் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை. தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ள ஒரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. NO | Description | Qty in Nos | Estimate Amount | | M/s. Front Line Engineering Service, Chennai | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) |
| 1 | சாலையோர திறந்தவெளி மழைநீர் வடிகால் தூர்வாரும் டீ-சில்ட் கனரக வாகனம் – 3 எண்கள் வழங்கும் பணி (NALLA Cleaning vehicle).– BS VI emission standard | 3 | 3983800 | 11951400 | 3899786 | 11699358 |
| | Total | | | 11951400 | | 11699358 (-2.11%) Less |
| | | | EMD Rs.120,000/- | | Remitted through EMD Rs.120,000/-, Punjab National Bank (RTGS) Dt:17.08.2022 | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகை ரூ.**11951400**/-ஐ காட்டிலும் (-)2.11% குறைவாக ரூ.**11699358**/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Front Line Engineering Service, Chennai** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளது. இப்பணியானது 15வது நிதிக்குழு காற்றின் தரம் மேம்படுத்தல் தலைப்பில் 2021-22 ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ளும் பணியாதலால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்க மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் (-)2.11% குறைவாக ஒப்பந்தப்புள்ளி **M/s. Front Line Engineering Service, Chennai நிறுவனத்தாரின்** ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ. **11699358**/-ல் செலவில் மேற்கண்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 15வது நிதிக்குழு 2021-22 ஆண்டு காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.1100.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/ 10210 /2022(மையம்)**

**தீர்மானம் எண்: 195, பொருள்: 13 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:14**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 15வது நிதிக்குழு 2022–23 ஆண்டு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் ஜெட்ராடர் கனரக வாகனம்–4 எண்கள் மதிப்பீட்டுத் தொகை ரூ.292.00 லட்சத்தில் வழங்கும் பணிக்கு (10000 Litre Tank Capacity Jetting Cum Suction vehicle – 4 No's) நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் நிர்வாக அனுமதி எண்.15576/2022/CFC, நாள்:16.06.2022ல் அனுமதி அளிக்கப்பட்டதன் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:185/2022–23, வரிசை எண்,5 நாள்:18.08.2022ன் வாயிலாக முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்தப்புள்ளியில் பெறப்பட்ட மூன்று நிறுவனங்களில் இரு நிறுவனங்கள் தொழில்நுட்ப தகுதி பெறவில்லை. தொழில் நுட்ப தகுதி பெற்ற ஒரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியின் விவரம் பின்வருமாறு மாமன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. NO | Description | Qty in Nos | Estimate Amount | | M/s. Tamil Nadu Chemicals Industries, Chennai | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate (Rs) | Amount (Rs) | Rate (Rs) | Amount (Rs) |
| 1 | 15வது நிதிக்குழு 2022–23 ஆண்டு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் ஜெட்ராடர் கனரக வாகனம்–4 எண்கள் வழங்கும் பணி. | 4 | 73,00,000 | 2,92,00,000 | 72,87,500 | 2,91,50,000 |
| | Total | | | 2,92,00,000 | | 2,91,50,000 (–0.17%) Less |
| | | | EMD Rs.292,200/– | | HDFC Bank, D.D.No.003838 Dt:17.08.2022, Rs.292,200/– | |

மேற்கண்ட விவரப்படியான பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டு தொகை ரூ.**2,92,00,000**/–ஐ காட்டிலும் (–) 0.17% குறைவாக ரூ.**2,91,50,000**/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **M/s. Tamil Nadu Chemicals Industries, Chennai** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை கூர்ந்தாய்வு குழு பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளது. இப்பணியானது 15வது நிதிக்குழு 2022–23 ஆண்டு திடக்கழிவு மேலாண்மை நிதியின் கீழ் மேற்கொள்ளும் பணியாதலால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்க மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் (–) 0.17% குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. Tamil Nadu Chemicals Industries, Chennai நிறுவனத்தா**ரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ. **2,91,50,000** /– நிதியில் மேற்கண்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.

2. மேற்கண்ட செலவினத்தை 15வது நிதிக்குழு 2022–23 ஆண்டு திடக்கழிவு மேலாண்மை தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2200.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/ 10212 /2022(மையம்)**

**தீர்மானம் எண்: 196, பொருள்: 14 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:15**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, 15வது நிதிக்குழு 2020–21ம் ஆண்டு பரிந்துரை நிதியினி கீழ், காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பின் சாலையோர திறந்த வெளி மழைநீர் வடிகால் தூர்வாரும் வாகம் (Truck mounted de-silting vehicle) 1 எண்ணிக்கை வாங்கிக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல் முறை ந.க.எண்.21192/2021 AMRUT 2, நிர்வாக அனுமதி நாள்.23.11.2021 ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் முதல் ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் தொழில் நுட்ப தகுதி பெற்ற **M/s.Whale Enterprise Private Limited, Coimbatore** நிறுவனம் பணியை செய்ய முன்வராததால், மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண். 225/2022–23 நாள்.30.08.2022ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் M/s. Front Line Engineering Service நிறுவனம் மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளனர். மேற்படி நிறுவனம் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளது. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ள விபரம் பின்வருமாறு மாமன்றத்தின் பார்வைக்கு, ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Qty | Estimate Rate | M/s. Front Line Engineering Service, | After Negotiation |
|---|---|---|---|---|---|
| | | | Amount inRs, | Amount in Rs. | Amount in Rs. |
| 1 | சாலையோர திறந்தவெளி மழைநீர் வடிகால் தூர்வாரும் வாகனம் (Truck mounted de-silting Vehicle) - 1 எண்ணிக்கை வழங்கும் பணி. | 1 No | 3685731.00 | 3884786.00 | 3868150.00 |
| | **Total** | | | **3884786.00 (+5.40%) More** | **3868150.00 (+4.94% ) More** |
| | EMD Rs. 37,000/- | | | Punjab National Bank, RTGS Reference ID No.5092682803 Date.27.08.2022, Rs.37,000/- | |

மேற்கண்ட விவரப்படி **M/s. Front Line Engineering Service, Chennai** நிறுவனத்தார் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி, மதிப்பீட்டு தொகை ரூ.3685731/–ஐ காட்டிலும் (+)5.40% கூடுதலாக ரூ.3884786/–க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளனர். எனவே, மேற்படி நிறுவனத்தாரை ஒப்பந்தப்புள்ளி விலையினை குறைத்து தரகோரியதில், 05.09.2022 அன்று (+)5.40 சதவிகிதத்திலிருந்து குறைத்து (+)4.94% கூடுதலாக ரூ.3868150/–ல் பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளனர். அதனை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு இவ்வொப்பந்தப்புள்ளி 2வது அழைப்பாக இருப்பதாலும், 2020–21ம் வருடத்தில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகையாக இருப்பதாலும், (+)4.94% கூடுதலாக உள்ளதை பரிசீலனை செய்து பரிந்துரைத்துள்ளது. இப்பணியானது 15வது நிதிக்குழு காற்றின் தரம் மேம்படுத்தல் தலைப்பில் 2020–21 ஆண்டு நிதியின் கீழ் மேற்கொள்ளும் பணியாதலால் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்க மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின்படி மதிப்பீட்டை காட்டிலும் (+4.94)% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி **M/s. Front Line Engineering Service, Chennai நிறுவனத்தாரின்** ஒப்பந்தப்புள்ளியை ஏற்று ரூ.**3868150**/– செலவில் மேற்கண்ட பணியை மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன்அனுமதியுடன் மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை 15வது நிதிக்குழு 2020–21 ஆண்டு காற்றின் தரம் மேம்படுத்துதல் தலைப்பில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.2100.00 இலட்சத்தில் இருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/3397 /2021(மையம்)**

**தீர்மானம் எண்: 197, பொருள்: 15 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள்:16**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் Swachh Bharat Mission 2.0 2021–22ம் ஆண்டு நிதியின் கீழ், சாலைகளில் சேகரமாகும் மண் துகள்களை அகற்றி தன்னுள் சேகரித்துக் கொள்ளும் வசதி உடைய (0.54 – 0.64 க.மீ கொள்ளளவு) சிறிய ரக சாலை சுத்தம் செய்யும் வாகனம் (Mechanized Road Sweeping machine - Small) 1 எண்ணிக்கை வாங்கிக் கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5989/ SBM 2022 நாள்:09.05.2022ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில், 2வது முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்:164/2022–23 நாள்:03.08.2022ன் வாயிலாக ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 3 நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளதில் இரண்டு நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி பெறவில்லை. தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ள ஒரு நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விபரம் பின்வருமாறு பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| Sl. No. | Name of work | Qty | Estimate Amount | | M/s. Neptune Automation, Erode | | After Negotiation | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Rate | Amount | Rate | Amount | Rate | Amount |
| 1 | தூய்மை இந்தியா திட்டம் Swachh Bharat Mission 2.0 2021–22ம் ஆண்டு நிதியின் கீழ், சாலைகளில் சேகரமாகும் மண் துகள்களை அகற்றி தன்னுள் சேகரித்துக் கொள்ளும் வசதி உடைய (0.54 – 0.64 க.மீ கொள்ளளவு) சிறிய ரக சாலை சுத்தம் செய்யும் வாகனம் (Mechanized Road Sweeping machine - Small) 1 எண்ணிக்கை வழங்கும் பணி | 1 No | **3000000** | **3000000** | 3000000 | 3000000 | **2995000** | **2995000** |
| | **Total** | | | | | **Estimate Rate** | | **2995000 (–0.17%) Less** |
| | | EMD Rs. 30,000/– | | | ICICI Bank Demand Draft No.501443, Date.27.07.2022 Amount Rs.30,000/– | | | |

மேற்கண்டபணிக்கு, **M/s. Neptune Automation, Erode** நிறுவனம், மதிப்பீட்டை காட்டிலும் –0.17% குறைவாக மேற்கொள்ள சம்மத கடிதம் வழங்கியுள்ளதை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின் படி ஏற்றும், மேற்படி பணியானது Swachh Bharat Mission 2.0 2021–22ம் ஆண்டு நிதியின் கீழ் உடன் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதற்கு மாமன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகப் குறிப்பு:**

1. ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழுவின் பரிந்துரையின் படி மதிப்பீட்டை காட்டிலும் –0.17% குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள **M/s. Neptune Automation, Erode** நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியை ரூ.29,95,000/–ல் மேற்கொள்ள மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதியுடன் பணி உத்திரவு வழங்கியதற்கு அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினை Swachh Bharat Mission 2.0, 2021–22ம் ஆண்டு நிதியின் கீழ், ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை ரூ.30.00 லட்சத்திலிருந்து மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ5/6984/2022(மையம்)**

**தீர்மானம் எண்: 198, பொருள்: 16 அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**மேயர்**
**திருச்சிராப்பள்ளி மாநகராட்சி**